# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110243

1. District : மாவட்டம் கோவை | PS: காவல்நிலையம் ஊ.த.க | Year: ஆண்டு 2020 | FIR No.: மு.த.அ. எண் 05/2020/AC/CB | Date: நாள் 13.10.2020

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018. | Sections பிரிவுகள்: 7(a), 7(A)
(ii) Act சட்டம்: Cr.P.C | Sections பிரிவுகள்: 102
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 12.10.2020 | Date to : நாள் வரை 13.10.2020
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 17.30 hrs | Time to : நேரம் வரை 06.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.10.2020 | Time நேரம் 16.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD.Vol. I | Time நேரம் 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 35 கிமீ வடக்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், மேட்டுப்பாளையம், கோவை மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. P. துரைராஜ் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. பழனிசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர், கோவை. | (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) திருமதி. P. [illegible], உதவியாளர், பெரியநாயக்கன்பாளையம் சார் பதிவாளர் அலுவலகம், சார்பதிவாளர் (பொறுப்பு) மேட்டுப்பாளையம். (2) திரு. M.R. [illegible], உதவியாளர். (3) திரு. V. [illegible], இளநிலை உதவியாளர், (4) திருமதி. K. [illegible] அலுவலக உதவியாளர் சார்பதிவாளர் அலுவலகம், மேட்டுப்பாளையம் (5) திரு. P. [illegible], System Administrator, [illegible] மேட்டுப்பாளையம் (6) Tmt. S. [illegible], [illegible] (7) A. [illegible], மேட்டுப்பாளையம், கோவை (8) திரு. N. [illegible], [illegible] நரசிம்மநாயக்கன்பாளையம், கோவை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant : குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தாமதம் ஏற்பட்டதின் காரணம்
— தாமதமில்லை —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் R. ஜெயராஜ்.
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண்
ஊ.த.க. பிரிவு, கோவை
13.10.2020.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

**Continuation of the FIR in Coimbatore V&AC Cr.No.05/2020/AC/CB u/s. 7(a), 7(A) of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and 102 Cr.P.C.**

இன்று 13.10.2020-ம் தேதி 16.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.P.துரைசாமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர் கோயம்புத்தூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். Cr.No.05/2020/AC/CB u/s. 7(a), 7(A) of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and 102 Cr.P.C-ஆக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின் வருமாறு அனுப்புநர் திரு.P.துரைசாமி, மாவட்ட ஆய்வுகுழு அலுவலர்/ துணை ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண்.508/2020/ஐ1 நாள் 13.10.2020 அம்மையீர் பொருள் திடீர் தணிக்கை - கோவை மாவட்டம்- சார்பதிவாளர் அலுவலகம், மேட்டுப்பாளையம்,கோயம்புத்தூர்- திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் மனு மேல் நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக. கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் வட்டம், மேட்டுப்பாளையம் to கோயம்புத்தூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும், பத்திர எழுத்தர்களிடமிருந்தும் நேரடியாகவும் மறைமுகமாகவும் கையூட்டு பணம் பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகிய நானும், கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 12.10.2020-ம் தேதி மதியம் 14.00 மணிக்கு புறப்பட்டு சென்று கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தை 12.10.2020-ம் தேதி 17.20 மணி முதல் மறு நாள் 13.10.2020-ம்

தேதி 06.30 மணிவரை திடீர் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டபோது அலுவலகத்தின் வளாகத்தில் நுழைந்தவுடன், நிறுத்தப்பட்டிருந்த Maruti Suzuki Celerio வாகன எண். TN 59 BP 5006 என்ற காரின் அருகில் நின்றுகொண்டிருந்த நபர்களை விசாரிக்க அவர்களில் ஒருவரின் பெயர் திரு.கண்ணன் என்றும், மற்றொருவர் பெயர் திரு.ரமேஷ் என்றும் கூறினார்கள். அதில் திரு.கண்ணன் என்பவர் தற்போது மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் பொறுப்பிலிருக்கும் திருமதி.லதாராணி என்பவரின் கணவர் என்றும், திரு.ரமேஷ் என்பவர் System Administrator என்றும் கூறியதால் அவர்கள் இருவரையும் அழைத்து கொண்டு மேட்டுப்பாளையம் சார்-பதிவாளர் அலுவலக கட்டிடத்தின் கிழக்கு பார்த்த வாசலுக்குள்ளே நுழைந்ததும் ஒரு வரவேற்பறை இருந்தது. அதில் அவர்களை அமரவைக்கப்பட்டது. முன் அறையினுள் நுழைந்தவுடன் இடது புறம் பத்திரபதிவிற்காக வரும் பொதுமக்களிடம் மை கைரேகை பதிவு செய்வதற்காக மேஜை போடப்பட்டுள்ளது. அலுவலக உதவியாளர் பத்திரபதிவு செய்பவர்களிடம் ரேகை எடுக்கும் பணியை செய்து கொண்டிருந்தார். சில பொதுமக்கள் மற்றும் ஆவணம் தயார் செய்யும் நபர்களும் அமர்ந்திருந்தார்கள். அந்த வரவேற்பறையின் இடதுபுறம் வடக்குபார்த்து இருந்த முதல் அறையில் ஒருவர் பணிபுரிந்து கொண்டிருந்தார். அதனை தொடர்ந்து அந்த வரவேற்பறையின் இடது புறம் வடக்குபார்த்து இருந்த அறையின் நுழைவுவாயிலின் வழியாக நுழைந்தவுடன் அந்த அறையின் இடதுபுறம் புகைப்படம் எடுக்கும் ஒரு இளநிலை உதவியாளரும் மற்றும் Data Entry Operator-ன் இருக்கைகள் இருந்தது. அதில் இரண்டாவது இருக்கையை அடுத்தாற்போல் வடக்குபார்த்தவாறு சார்பதிவாளரின் இருக்கை இருந்தது அதில் சார்பதிவாளர் அமர்ந்து பணிசெய்துகொண்டிருந்தார். அதனை தொடர்ந்து கிழக்குபார்த்தவாறு பதிவுவைப்பறையும், அதன் உள்ளே செல்லும்போது மற்றொரு பதிவுவைப்பறையும் இருந்தது. அந்த அறையின் மேற்கு கடைசியில், ஒரு நபர் ஒரு குறிப்புச்சீட்டுடன் கூடிய கத்தையான பணத்தை எண்ணிக்கொண்டிருந்தார். அவரை அங்கிருந்து கணினி அறைக்கு அழைத்து வந்து விசாரித்த போது அவர் பெயர் திரு.விக்னேஷ் என்றும், கடந்த 21.02.2020-ம் தேதி முதல் இளநிலை உதவியாளராக அவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், தனது பணியானது பத்திர பதிவுக்கு வரும் பொதுமக்கள் கொண்டுவரும் பத்திரங்களில் கண்டுள்ள

விபரங்களை ஏற்கனவே இணையவழியில் பதிவேற்றம் செய்த விபரங்களுடன் ஒப்பிட்டு பார்த்து சரியாக உள்ளதா என்பதை உறுதிசெய்து, ஆவணம் பதிவுசெய்பவர்களின் புகைப்படங்கள் எடுப்பதும், கைரேகை பதிவுசெய்வதும் தனது பணியாகுமென்றும், 12.10.2020-ம் தேதி எப்போதும் போல காலை 10.00 மணிக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிக்கு வந்து தனது பணிகளை செய்துவந்ததாகவும் தெரிவித்து கத்தையாக பணத்தையும் குறிப்புச்சீட்டையும் தானாக ஆஜர் செய்தார். அது குறித்து அவரிடம் விசாரிக்க 12.10.2020-ம் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு தங்கள் அலுவலகத்தில் எப்போதும் பத்திரப்பதிவு செய்யவரும் திருமதி.செல்வி என்பவர் அன்று ஒரு வீடு கிரையம் செய்ததற்கு ரூ.2000/-ம் மற்றும் சைட் கிரையம் செய்வததற்கு ரூ.1000/-ம் ஆகமொத்தம் ரூ.3000/- பணத்துடன் ஒரு துண்டுச்சீட்டில் அதன் விபரத்தினை குறிப்பிட்டு தன்னிடம் கொடுத்ததாகவும், அதனை பெற்றுக்கொண்டு அதன் தொடர்ச்சியாக அதே துண்டுச்சீட்டில் ஜீவா 10000 அதன் தொடர்ச்சியாக திங்கள் என்று எழுதப்பட்டு அதன் கீழாக சதாசிவம் 1000, ரவீந்திரன் 1000, பகவதி டைப் 3000, PNP Advocate 3000, காந்திபுரம் கோவை 500, அழகேசன் 1500, அன்னூர் 1000, பண்ணாரி டைப் 4000, சங்கீதா 4000, லட்சுமி 6500, ரமேஷ் 1000 அட்வகேட் 1000 என்று தான் குறிப்பிட்டு எழுதி வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அதனைப்பற்றி விசாரித்தபோது 12.10.2020-ம் தேதியில் அவ்வலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்ய வந்தவர்களிடம் லஞ்சமாக பெற்ற தொகையைதான் அவ்வாறு குறிப்பிட்டிருந்ததாகவும் கூறினார். மேலும் அவரிடம் விசாரிக்க பதிவுவைப்பறையில் இருந்த கோப்புகளிலிருந்து ரூ.1200/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதைப்பற்றி விசாரிக்க அவர் அன்று அவ்வலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்ய வந்த கோவை அட்வகேட் ஒருவர் லஞ்சமாக கொடுத்தபணம் என்று கூறினார். அவரிடம் ஆகமொத்தம் மேற்படி லஞ்சமாக பெற்ற பணம் ரூ.41,700/-ம், மேற்படி பணம் பற்றிய விபரம் குறிப்பிட்டிருந்த துண்டுச்சீட்டையும் விசாரணைக்காக கைபற்றப்பட்டது. மேலும் அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவராக முன்வந்து தான் 12.10.2020-ம் தேதி காலை ரூ.600/-ஐ தனது வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு வந்தபோது கொண்டுவந்ததாகவும் மதிய உணவிற்கு ரூ.190/-செலவு செய்துவிட்டதாகவும், தற்போது ரூ.410/-ஆனது அவரிடத்தில் உள்ளதாகவும், அவரது பர்ஸிலிருந்து எடுத்துகாட்டி அது தனது

சொந்தபணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அலுவலக தனிநபர் பணப்பதிவேட்டை சரிபார்த்த போது திரு.விக்னேஷ் கொண்டுவந்த மேற்படி ரூ.600/- பதிவு செய்யப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து வரவேற்பறையில் அமரவைக்கப்பட்டிருந்த மேட்டுப்பாளையம் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.லதாராணி அவர்களின் கணவர் திரு.கண்ணன் அவர்களை விசாரிக்க அவர் தற்போது Acting Driver-ஆக பணிசெய்து வருவதாகவும் அவருடைய மனைவி திருமதி.லதாராணி, உதவியாளர், பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்தும், தற்போது மேட்டுப்பாளையம், சார்பதிவாளர் பொறுப்பு வகித்து வருவதாகவும், தான் கடந்த சுமார் 2-மாதமாக தனது மனைவி லதாராணியை தனது வீட்டிலிருந்து மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு காலையில் அழைத்து வந்து விட்டுவிட்டு மாலையில் திரும்ப வீட்டிற்கு அழைத்து சென்றுவிடுவதாகவும், அதுபோல் 12.10.2020-ம் தேதி காலை மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தனது மனைவியை இறக்கிவிட்டு அன்றைய தினம் மாலை சுமார் 05.00 மணிக்கு தனது மனைவி திருமதி.லதாராணியை திரும்ப அழைத்து செல்ல சார்பதிவாளர் அலுவலக கட்டிடத்தின் வெளியே அலுவலக வளாகத்திற்குள் காத்திருந்ததாக தெரிவித்தார். தொடர்ந்து திரு.கண்ணன் அவர்களிடம் உள்ள பணத்தை பற்றி விசாரிக்க அவர் சில ரூபாய் நோட்டுகளை தனது பேண்ட் பாக்கட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்க்க அதில் ரூ.9,900/-இருந்தது. அதைபற்றி விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால், அந்த பணத்தினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் திரு.கண்ணன் மற்றும் அவரது மனைவி திருமதி.லதாராணி அவர்களையும் அழைத்துக் கொண்டு அலுவலக வளாகத்திற்கு உள்ளே திரு.கண்ணன் என்பவரால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திருமதி.லதாராணி அவர்களின் காரினை சோதனை செய்து பார்த்ததில் அந்த காரில் ஓட்டுநர் இருக்கையின் வலதுபுறம் உள்ள உட்புற கதவில் காக்கி நிற கவரில் கத்தையாக பணம் இருந்தது அதை எண்ணிப்பார்க்க அதில் 150 எண்ணிக்கையிலான ஐநூறு ரூபாய் நோட்டுகள் இருந்தது. அதன் தொகை ரூ.75,000/-ஆகும். அதனைப்பற்றி திரு.கண்ணன் மற்றும் அவரது மனைவி திருமதி.லதாராணி அவர்களிடம் விசாரிக்க அவர்கள் அந்த பணத்திற்கான தகுந்த முகாந்திரம் சொல்லாததால் அந்தப்பணத்தையும்,

காக்கி நிற கவரையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன்பின்னர் வரவேற்பறையில் மை கைரேகை வைக்கும் இருக்கையில் அமர்ந்திருந்த நபரைப்பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் திருமதி.விஜயலட்சுமி, வயது 52 என்றும் கடந்த 14.08.2019-ம் தேதி முதல் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், எப்போதும் போல் 12.10.2020 அன்று காலை 10.00 மணிக்கு அவ்வலுவலகத்திற்கு வந்து பணியை தொடர்ந்து செய்துகொண்டிருந்ததாகவும், அதனைத் தொடர்ந்து 12.10.2020-ம் தேதி மாலை லஞ்சஒழிப்பு துறை அதிகாரிகள் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு திடீரென வந்து அவரை விசாரித்தபோது அவரது Hand Bag-ல் இருந்த சிறிய மணிபர்ஸிலிருந்து பணத்தை வெளியே எடுத்து அவரது மேஜைக்கு அடியில் தூக்கி எறிந்ததாகவும் கூறினார். அப்போது அந்தப்பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.8,750/-இருந்தது. அதை பற்றி அவரை விசாரிக்க மேற்படி பணமானது சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திர பதிவிற்காக ஆவண எழுத்தர்கள் மற்றும் பொதுமக்களிடம் லஞ்சமாக பெற்ற பணமென்றும், அந்த பணத்தை தாங்கள் எடுத்துவிட்டால் தான் மாட்டிக் கொள்வேன் என்று பயந்து அந்தபணத்தை எடுத்து எறிந்ததாகவும் கூறினார். எனவே அந்த பணம் ரூ.8,750/-ம் விசாரணைக்காக கைபற்றப்பட்டது. மேலும் அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவராக முன்வந்து தான் 12.10.2020-ம் தேதி காலை ரூ.700/-ஐ கொண்டுவந்ததாக தனது hand bag-லிருந்து எடுத்துகாட்டி அது அவரது சொந்தபணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அலுவலக தனிநபர் பணப்பதிவேட்டில் திருமதி.விஜயலட்சுமி ரூ.700/- கொண்டுவந்த விபரத்தை சரிபார்த்தபோது அதில் மேற்படி ரூ.700/- பதிவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் வரைவேற்பறையின் இடதுபுறம் வடக்குபார்த்திருந்த உதவியாளர்களின் அறையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் மகேஷ்குமார், வயது 42, என்றும் கடந்த ஆகஸ்ட் 2018ம் ஆண்டு முதல் உதவியாளராக, மேட்டுப்பாளையம், சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், தனது பணியானது கடிதபோக்குவரத்து கவனிப்பது, பணியாளர் பணிப்பதிவேடு பராமரிப்பது, காலமுறை அறிக்கைகள் தயாரித்தல், இந்திய முத்திரைச்சட்டம் பிரிவு 47A, அது சம்பந்தப்பட்ட கோப்புகள் தயாரித்து, மாவட்ட வருவாய் அலுவலர்(முத்திரை) கோவை அவர்களுக்கு அனுப்பிவைப்பது

எனவும், 12.10.2020ம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கம்போல் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பணிக்கு வந்து பணி செய்து கொண்டிருந்தவரை, அவருடைய அறையிலிருந்து வரவேற்பறையின் இடதுபக்கம் வடக்குபார்த்து இருந்த பேட்டரி மற்றும் மின்சாதனப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த இரண்டாவது அறையின் அருகில் அமரவைக்கப்பட்டது. பின்னர் அலுவலக வளாகத்திலிருந்து அழைத்து வந்து வரவேற்பறையில் ஏற்கனவே அமரவைக்கப்பட்டிருந்த இரண்டாம் நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.ரமேஷ், வயது 35 என்றும் கடந்த மே 2011ம் ஆண்டு முதல் System Administrator- ஒப்பந்தப்பணியாளராக, கோவை, நீலகிரி, திருப்பூர் உள்ளடங்கிய கோவை மண்டலத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகங்களில் கணினி பழுதுநீக்கும் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினார். மேலும் அவர் 12.10.2020-ம் தேதி சுமார் 17.00 மணிளவில் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து புதியதாக வந்த கணிணிகளை install செய்ய வந்ததாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து அவரை அந்த அறையிலிருந்து வரவேற்பறையின் இடதுபக்கம் வடக்குபார்த்து இருந்த பேட்டரி மற்றும் மின்சாதனப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த இரண்டாவது அறையின் அருகில் அமரவைத்து, திரு.ரமேஷ் அவர்களிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அதற்கு அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு கத்தையான பணத்தை எடுத்து தானாக ஆஜர் செய்தார். அதனை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.36,000/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் விசாரிக்க அவர் அதற்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் அந்தப்பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த வரவேற்பறையில் அமர்ந்திருந்த திரு.மகேஷ்குமார் என்பவருக்கு அருகில் சில ரூபாய் நோட்டுகள் சிதறி காணப்பட்டது. அதனை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.2,800/-இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் விசாரிக்க அவர் அதற்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் அந்தப்பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் வரவேற்பறையில் இருந்த ஒரு பெண் நபரை விசாரிக்க அவர் பெயர் திருமதி.சித்ரா, வயது 34, என்றும் ஆர்.குமார் ஆவண எழுத்தர், 30-கிருஷ்ணசாமிநாயுடு சந்து-2, காரமடை ரோடு, மேட்டுப்பாளையம், கோவை அவர்களிடம் உதவியாளராக கடந்த 2-வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும், தனது பணியானது பத்திரம் பதிவு செய்ய

மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சம்பந்தப்பட்டவர்களை அழைத்து வந்து, பத்திர பதிவு முடித்து, பின்பு மாலை பத்திரத்தை திரும்ப வாங்கி செல்வது எனக்கூறினார். 12.10.2020-ம் தேதி மாலை தான் எப்பொழுதும்போல், பதிவு செய்த பத்திரத்தை திரும்ப வாங்க மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தின் வரவேற்பறையில் காத்திருப்பதாக தெரிவித்தார். அப்போது அவரிடம் அவர் வைத்திருக்கும் பணம்பற்றி விசாரித்த போது தான் வைத்திருந்த கத்தையான பணத்தை எடுத்து தானாக ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்க்க ரூ.20,000/-இருந்தது. அதைப்பற்றி அவரிடம் விபரம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால், அந்த பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் வரவேற்பறையின் ஒரு நபரை விசாரிக்க அவர் பெயர் திரு.பிரபாகரன், வயது 45 என்றும், சிவக்குமார், வழக்கறிஞர், கிருஷ்ணசாமி நாயுடு சந்து, மேட்டுப்பாளையம், கோவை என்ற ஆவண எழுத்தாளர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிவதாகவும் கூறினார். மேலும் அவ்வப்போது அவர்களது அலுவலகத்திற்கு வரும் பத்திரப்பதிவுக்கான ஆவணங்களை மேட்டுப்பாளையம், சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்து தருவது வழக்கம் என்றும் கூறினார். 12.10.2020-ம் தேதி மாலை எப்பொழுதும்போல், பதிவு செய்த பத்திரத்தை திரும்ப வாங்க தான் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருக்கும் பணம்பற்றி விசாரித்தபோது அவர் வைத்திருந்த கத்தையான பணத்தை எடுத்து தனாக ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்க்க ரூ.32,000/-இருந்தது. அதைப்பற்றி அவரிடம் விபரம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால், அந்த பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த வரவேற்பறையில் அமர்ந்திருந்த மற்றொரு நபரைப்பற்றி விசாரிக்க அவர் பெயர் திரு.கே.ஏ.கிருஷ்ணசாமி என்றும் தான் வழக்கறிஞராக பணிபுரிந்து, வருவதாகவும், 12.10.2020-ம் இரண்டு ஆவணங்களை மேட்டுப்பாளையம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்ய தனது வீட்டிலிருந்து வந்ததாகவும், பத்திரப்பதிவு முடித்து பத்திரத்தை திரும்ப பெறும்போது புகைப்படம் மற்றும் கைரேகை எடுத்த திரு.விக்னேஷ் என்பவர் தன்னிடம் ரூ.1000/- கேட்டுப்பெற்றுக்கொண்டதாகவும், கூறி தன்னிடம் பணத்தைப் பெற்றுக்கொண்ட திரு.விக்னேஷ் என்பவரை அடையாளம் காட்டினார். அப்போது திரு.விக்னேஷ்

என்பவரை விசாரிக்க அவரும் மேற்படி பத்திரபதிவுக்காக மேற்படி கிருஷ்ணசாமி அவர்களிடமிருந்து ரூ.1000/- கேட்டு பெற்றுக்கொண்டதாக ஒப்புக்கொண்டார். கணினி அறையில் தென் கிழக்கு மூலையில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க அவர் தன் பெயர் திரு.பரசுராமன் என்றும், அவர் கடந்த 05.08.2019-ம் தேதி முதல் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவர் தனது சட்டையின் மேல் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.1640/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தில் ரூ. 250/- அலுவலகத்தில் உள்ள தனிநபர் பணம் இருப்புபதிவேட்டில் பதியபட்டிருந்தது. மீதமுள்ள தொகையை பற்றி விசாரிக்க அலுவலகப்பணிக்காக தபால் ஒட்டுவில்லை வாங்குவதற்காக வைத்திருப்பதாக கூறியதால், மேற்படி பணத்தை அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் 1)திருமதி.லதாராணி, உதவியாளர், பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் சார்பதிவாளர் பொறுப்பு மேட்டுப்பாளையம், 2) திரு.விக்னேஷ், இளநிலை உதவியாளர் 3)திருமதி.விஜயலட்சுமி, அலுவலக உதவியாளர், ஆகியோர்களிடம் மாவட்ட ஆய்வு குழு அலுவலரால் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் சார்பதிவாளரிடம் அன்றைய தினம் பொதுமக்களுக்கு பத்திரம் பதிவு செய்யும் வேலையை தொடர்ந்து செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதன்பேரில் பதிவு செய்யும் வேலை தொடர்ந்து நடைபெற்றது. மேலும் சார்பதிவாளரிடம் விசாரிக்க 12.10.2020-ம் தேதி பதிவேடுகளின்படி தொகை இருப்பு பற்றி கீழ்கண்டவாறு விபரத்தை தெரிவித்தார்.

| Heads of Account | E. Payment Rs. | DD | Cash | Total Rs. |
|---|---|---|---|---|
| A-Account | 9,54,187 | - | - | 9,54,187 |
| Sub Division | 29,000 | - | - | 29,000 |
| IP CD | 6,400 | - | - | 6,400 |
| Sec 41 | 5,39,199 | - | - | 5,39,199 |
| Hindu Marriage | 695 | - | - | 695 |
| Chit | - | - | - | - |
| Birth and Death | 500 | - | - | 500 |
| Account D | 8,640 | - | - | 8,640 |

| | | | | |
|---|---|---|---|---|
| Tamil Nadu Marriage | - | - | - | - |
| Special Marriage | - | - | - | - |
| Account B | 5 | - | - | 5 |
| Permanent Account | - | - | 250 | 250 |
| **Total** | **15,88,871** | | **250** | **15,38,876** |

மேலும், பதிவேட்டின்படி இருக்க வேண்டிய தொகை ரொக்கமாக ரூ.250/- ஆகும். இத்தொகை சரியாக இருந்தது. திடீர் தணிக்கை நடவடிக்கையின்போது 1) அசல் அலுவலக வருகை பதிவேடு நாள் 01.01.2020 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது (பக்கம் 1 முதல் 78 வரையிலான பக்கத்தில் முதல் 47பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது). 2) அலுவலகத்திலிருந்த தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டினை ஆய்வு செய்த போது 12.10.2020-ம் தேதி அலுவலகத்தில் பணி செய்யும் அலுவலர்களான சார்பதிவாளர் (பொறுப்பு) திருமதி.P.லதா ராணி என்பவரிடம் ரூ.650/-ம், உதவியாளர் திரு. மகேஷ்குமார் என்பவரிடம் ரூ.800/-ம், இளநிலை உதவியாளர் திரு.B.பரசுராமன் என்பவரிடம் ரூ250/-ம், இளநிலை உதவியாளர் திரு.V.விக்னேஷ் என்பவரிடம் ரூ.600/-ம், அலுவலக உதவியாளர் திருமதி.மு.விஜயலட்சுமி என்பவரிமிருந்து ரூ.700/-ம், தகவல் தொகுப்பு பணியாளர் R.லதாமணி என்பவரிடமிருந்து ரூ.120/-ம், செந்தில்குமார் ரூ.420/-ம், கேமரா Operator திரு.ஜான்சன் பிரபு ரூ.200/-ம் உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் அலுவலக உதவியாளர் திருமதி.விஜயலட்சுமி அவர்கள் கையெழுத்து செய்யாமல் இருந்தது. அதை பற்றி அவரிடம் கேட்க அவர் மறந்துவிட்டதாக கூறினார். மேற்படி இரண்டு ஆவணங்களையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் 12.10.2020-ம் தேதிக்கான 1) அ-பதிவேடு, 2) உட்பிரிவு கட்டணம் கணக்கு, 3) IP Camera குறுந்தகடு கட்டணம், 4) பிரிவு 41-ன் கணக்கு, 5) இந்து திருமண கணக்கு, 6) பிறப்பு இறப்பு கணக்கு, 7) D கணக்கு, 8) B கணக்கு ஆகியவற்றை கணிணியில் இருந்து பிரிண்ட் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் (பொறுப்பு) திருமதி.லதாராணி அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டது. மேலும் H கணக்கு பதிவேட்டை பார்வையிட்டதில் 12.10.2020-ம் தேதியின் தினசரி கணக்கு பதிவுகள் ஏதும்

எழுத்தப்படவில்லை, மேலும் கடைசி பதிவாக 07.10.2020-ம் தேதி பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதை பற்றி சார்பதிவாளர் (பொறுப்பு) திருமதி.லதா ராணி அவரிகளிடம் கேட்க மேற்படி தினசரி கணக்கு பதிவேடு கணிணியில் update ஆவதால் H கணக்கு பதிவேட்டில் எழுதவில்லை என்று தெரிவித்தார். மேற்படி பதிவேட்டின் கடைசி பக்கத்தை நகல் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் (பொறுப்பு) திருமதி.லதாராணி அவரிகளிடம் சான்றொப்பம் பெறப்பட்டு மேற்படி அனைத்து ஆவணங்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

**பதிவு ஆவணங்களின் விபரம் :**

ஆவண எண் புத்தகம்-1-ல் 8196/2020 முதல் 8254/2020 வரை புத்தகம்-3-ல் (உயில் ரத்து) ஆவணம் 175/2020 மற்றும் 176/2020 உயில் ஆவணங்கள் மொத்தம் 62 ஆவணங்களும், பொது அதிகார ஆவணம் (Adjudication) ஒன்று ஆவண எண்.25/2020 மொத்தம் 63 புதிய ஆவணங்கள் 12.10.2020-ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் ஆவண எண் 7544/2020-க்கு குறைவு முத்திரை தீர்வை மற்றும் குறைவு பதிவு கட்டணம் 12.10.2020-ல் வசூலிக்கப்பட்டிருந்தது. மேலும் முத்திரைத்தாள் இருப்பு பற்றி சார்பதிவாளரிடம் கேட்டபோது அவர் Non Judicial stamp ரூ.60,000/- மதிப்பிலான முத்திரைத்தாள் இருப்பில் உள்ளது என்று கூறினார். அவற்றை சரிபார்க்க ரூ 10,000/- மதிப்புள்ள 6 முத்திரைத்தாள்கள் வரிசை எண் C 018784 முதல் C 018789 வரை சரியாக இருந்தது. மேலும் ரூ.2,500/- மதிப்பிலான சிறப்பு ஒட்டு வில்லை இருப்பில் உள்ளது என்று கூறினார். அவற்றை சரிபார்க்க ரூ.1/- மதிப்பில் (1 x 55 = 55), (5 x 49 = 245), (10 x 220 = 2200) சரியாக இருந்தது. மேலும் ரூ.1000/- மதிப்பிலான நீதிமன்ற ஒட்டு வில்லை இருப்பில் உள்ளது என்று கூறினார். அவற்றை சரிபார்க்க (1 x 268 = 268), (4 x 183 = 732) சரியாக இருந்தது. மேற்படி திடீர் தணிக்கையின் போது பணம் ரூ.2,26,150/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நடவடிக்கைகள் இன்று 13.10.2020-ம் தேதி காலை 06.30 மணிக்கு Covid-19 பெருந்தொற்று பரவல் தடுப்பு சம்பந்தமான அரசு கூறியுள்ள அனைத்து வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் சமூக இடைவெளியை கடைபிடித்தும் முடிக்கப்பட்டது. மேற்படி தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் இந்த திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து

விவரங்களையும் குறிப்பிட்டுள்ளேன். திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.2,26,150/-, திரு.விக்னேஷ், இளநிலை உதவியாளர் அவரிடமிருந்து கைப்பற்றிய, பணம் பெறப்பட்டதற்கான குறிப்புச்சீட்டு, பணம் வைக்க பயன்படுத்திய காக்கி நிற கவர், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சான்றொப்பம் பெற்ற ஆவணங்கள் மற்றும் திருமதி. P.லதாராணி, திரு.வீ.விக்னேஷ் மற்றும் திருமதி. விஜயலட்சுமி ஆகியோரது வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். மேலும் 1) திருமதி. P.லதாராணி, க/பெ.கண்ணன், மேட்டுப்பாளையம் சார்-பதிவாளராக (பொறுப்பு), கோவை, 2) திரு.M.R.மகேஷ்குமார், உதவியாளர், மேட்டுப்பாளையம் சார்-பதிவாளர் அலுவலகம், கோவை, 3) திரு.வீ.விக்னேஷ், வயது 23/2020, த/பெ.வீராசாமி, இள நிலை உதவியாளர், மேட்டுப்பாளையம் சார்-பதிவாளர் அலுவலகம், கோவை, 4) திருமதி. விஜயலட்சுமி, வயது- 52/2020, க/பெ T.S.மணியன், அலுவலக உதவியாளர், மேட்டுப்பாளையம் சார்-பதிவாளர் அலுவலகம், கோவை, 5) திரு.P.ரமேஷ், System Administrator ஒப்பந்தப்பணியாளர், த/பெ. பழனிசாமி, கதவு எண்.471, இந்திராநகர், அன்னூர் ரோடு, மேட்டுப்பாளையம், கோவை, 6) திருமதி.S.சித்ரா, க/பெ. சுரேஷ், கதவு எண்.25G/4 சுபாஷ்காலனி, கோத்தகிரிரோடு, ராமசாமி நகர், மேட்டுப்பாளையம். கோவை, 7) திரு.A.பிரபாகரன், த/பெ.அய்யாசாமி, 4/99A, தோலம்பாளையம், கோவை மற்றும் 8) திரு.N.கண்ணன், த/பெ.பொ.நடராஜபிள்ளை, கதவு எண்.11A/7, 4வது குறுக்குதெரு, சூர்யாநகர், நரசிம்மநாயக்கன்பாளையம், கோவை ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (Sdxxxxx) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், கோயம்புத்தூர் இணைப்பு:- 1) நடவடிக்கை குறிப்புகள், 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,26,150/-, 3) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், 4) பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள், 5) குறிப்புச்சீட்டு, 6) காக்கி நிற கவர் ஒன்று. Madam, received the complaint along with proceedings, Cash Rs.2,26,150/-, Documents, Statements, bit of paper and Khaki colour cover on 13.10.2020 at 16.00hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.05/2020/AC/CB u/s. 7(a), 7(A) of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and 102 Cr.P.C. (Sdxxxxx) R.Ezhilarasi, (13.10.2020) Inspr., VAC, CBE. மேற்படி பதிவு

செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

(R.எழிலரசி) 13/10/2020
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.